இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 13.06.2026

‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனையை ஒப்புக்கொண்ட விஜய்!

திராவிட மாடல் ஆட்சியின் சாதனையை ஒப்புக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் விஜய். டெல்லியில் பிரதமர் மோடி முன்னிலையில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் உரையாற்றிய விஜய் பேச்சில் இவை வெளிப்பட்டது.

உலகளாவிய நிச்சயமற்ற பொருளாதாரச் சூழல்களுக்கு இடையிலும், இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் தமிழ்நாடு - என்று முதலமைச்சர் விஜய் சொல்லி இருப்பது ‘திராவிட மாடல்’ ஆட்சியில் எட்டப்பட்ட சாதனை ஆகும்.

2024-25 ஆம் நிதி ஆண்டில், திராவிட மாடல் ஆட்சியில் 11.19 விழுக்காடு வளர்ச்சியை தமிழ்நாடு கண்டது. இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்தது. சாதாரணமான சாதனை அல்ல இது. இதே சாதனை தொடர்வதும் சாதாரணமானது அல்ல. 2025-26 ஆம் நிதி ஆண்டில் 10.83 விழுக்காட்டைத் தக்க வைத்து இரட்டை இலக்கச் சாதனையை இரண்டாவது முறையும் மெய்ப்பித்துக் காட்டினார் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் தமிழ்நாடு என்கிற சாதனையை திராவிட மாடல் ஆட்சியின் மூலமாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்த்திக் காட்டினார்கள். இதனைச் சொல்லித் தான் விஜய்யும் பெருமைப்பட்டுக் கொண்டுள்ளார். தேர்தல் பரப்புரையில் தமிழ்நாடு குறித்தும், தி.மு.க. ஆட்சி பற்றியும் பொய் பேசினார் விஜய். ஆனால் நிதி ஆயோக் கூட்டத்தில், ‘வளர்ந்த மாநிலம் தமிழ்நாடு’ என்ற உண்மையைச் சொல்லி இருக்கிறார்.

அதேபோன்று இந்தியாவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 42 விழுக்காடு பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர் என்ற திராவிட மாடல் ஆட்சியின் சாதனையையும் ஒப்புக்கொண்டுள்ளார் விஜய்.

திருக்குறளைத் தேசிய நூலாகவும் அறிவிக்க வேண்டும் என நிதி ஆயோக் கூட்டத்தில் பேசி இருக்கிறார் விஜய். திராவிட மாடல் ஆட்சியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக இருந்த போதே 2021 ஆம் ஆண்டு திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென வலியுறுத்தி இருந்ததை தமிழ்நாடு மறந்திருக்காது.

தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை (NEET) தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது என்று நிதி ஆயோக் கூட்டத்தில் பேசி இருக்கிறார் விஜய். நீட் எதிர்ப்பு என இன்று பேசியிருக்கும் விஜய், ‘மருத்துவம் மட்டும்தான் படிப்பா?’ என்று கேட்டவர்தான். இன்று அவர் மனம் மாறி இருக்கிறார். அல்லது மனம் மாறியதாக நடிக்கிறார்.

2025 ஆம் ஆண்டு நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘‘அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். எங்கள் மாநிலத்தின் வளர்ச்சி என்பது, சமூகநீதி, சமத்துவம் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய கொள்கைகளை மையமாகக் கொண்டுள்ளது’’ என்று குறிப்பிட்டார்கள். இதையே வேறு வார்த்தைகளில் சொல்லி இருக்கிறார் விஜய். ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற சொல்லை மட்டும் நீக்கி இருக்கிறார்.

“தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சிகொண்ட மாநிலமாக மாற்றுவதே எனது இலக்கு ஆகும்” என்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுத் துறையின் அனைத்துக் கூட்டங்களிலும் சொன்னது ஆகும். அதையே, ‘‘2036-ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்வதற்கு தமிழ்நாடு பணியாற்றி வருகிறது” என்று சொல்லி இருக்கிறார் விஜய்.

திராவிட மாடல் ஆட்சியில், தனது கனவுத் திட்டமாக ‘நான் முதல்வன்’ திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். 48 லட்சம் மாணவ, மாணவியருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. ஐ.ஏ.எஸ். முதல் உலகளாவிய நிறுவனங்களில் வேலைகள் வரை மாணவ, மாணவியர் உயர்ந்தார்கள். இதையே காப்பி அடித்துச் சொல்லி இருக்கிறார் விஜய்.

‘‘ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் இளைஞர்களுக்கு உதவித் தொகையுடன் கூடிய பணியிடைப் பயிற்சிகள் (Internships) மற்றும் தொழில்துறையுடன் இணைந்த திறன் பயிற்சிகளை வழங்கும் “இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு இயக்கத்தை” (Youth Skill and Employment Mission) செயல்படுத்த விழைகிறேன்” என்று சொல்லி இருக்கிறார் விஜய். இதுதான் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘நான் முதல்வன்’ திட்டம் ஆகும்.

தமிழ்நாட்டுக்கு அறிவிக்கப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவ மனையை எப்போது கட்டித் திறப்பீர்கள் என்று கேட்காத விஜய், இரண்டாவது எய்ம்ஸ் மருத்துவமனையை கோவையில் அமையுங்கள் என்று சொன்னது ஜோக் ஆகத் தான் பார்க்க வேண்டி உள்ளது.

‘தி.மு.க. ஆட்சி தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்கிறது’ என்று குற்றம் சாட்டியவர் விஜய். இன்று அவர் எதற்காக நிதி ஆயோக் கூட்டத்துக்குப் போனார்? ‘‘ஒன்றிய அரசுடன் ஆக்கப் பூர்வமான ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு எங்கள் அரசு தொடர்ந்து உறுதி பூண்டுள்ளது” என்று விஜய் நெளிந்து குழைந்தது ஏனோ? தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவா?

தன் மீதான 41 பேர் மரணத்துக்குக் காரணமான கரூர் சம்பவ சி.பி.ஐ. விசாரணையில் இருந்து தப்பித்துக் கொள்ளவா? அல்லது வருமான வரித் துறையில் ஏராளமான வழக்குகள் இருக்கிறதே? அதில் இருந்து தப்பிக்கவா?

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை, தமது இல்லத்தில் தூத்துக்குடி வ.உ. சி. கல்லூரியின் 75 ஆண்டு கால முக்கிய நிகழ்வுகள் மற்றும் நினைவுகள் அடங்கிய நினைவு மலரை வெளியிட்டு வாழ்த்திய போது எடுத்த படம். கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் மற்றும் வ.உ.சி. கல்லூரி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

தேர்தலுக்குப் பிறகு

கூட்டணிக் கட்சிகள் தங்கள் நிறத்தை வெளிப்படுத்துகின்றன!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சனம்!

சென்னை, ஜூன் 13- கூட்டணிக் கட்சியினர் தேர்தலுக்குபின் தங்கள் நிறத்தை வெளிப்படுத்துகின்றன என்று தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: -

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன், தற்போதைய சூழலில் தி.மு.க. கூட்டணியில் நாங்கள் இல்லை என்றுதான் கூறியுள்ளார். எப்போதும் இல்லை என கூறவில்லை. கம்யூனிஸ்ட்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக திமுக கூட்டணியில் இருந்தனர்.

அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். ஒருநாளில் கம்யூனிஸ்ட்களுக்கு ஏற்பட்ட மனசங்கடம் குறித்து அவர்களிடம் தான் கேட்கவேண்டும். யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும், தனித்து விடப்பட்டாலும் எங்களுக்கு கவலை இல்லை. ஏனெனில், 234 தொகுதிகளில் தனித்து போட்டியிட்டு வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் பலம் தி.மு.க.விடம் உள்ளது.

தகைசால் தமிழர் விருது:

கூட்டணிக் கட்சியினரை நன்கு மதித்தோம் என்பதற்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு தகைசால் தமிழர் விருது கொடுத்ததே சான்று.

கூட்டணி கட்சியினர் தேர்தலுக்கு பின்பு தங்கள் நிறத்தை வெளிப்படுத்துகின்றனர். கொள்கையோடு கூட்டணிக்கு வந்தவர்களின் கொள்கை இப்போது கேள்விக்குறியாக உள்ளது. ஒருமாதத்தில் இந்த அரசு என்ன மாற்றம் செய்துகாட்டியது, தி.மு.க. என்ன தவறு செய்தது என்பதை கூட்டணியை விட்டு வெளியேறுபவர்களைத் தான் கேட்க வேண்டும். எனினும், கூட்டணி இல்லை என்றாலே கட்சித் தொண்டர்கள் தெம்பாக இருப்பார்கள். மேலும், எப்போதும் காங்கிரஸ் கூடுதல் சுமைதான்.

மின்வெட்டு செயற்கையானதா அல்லது திட்டமிட்ட சதியா என்ற கேள்வி எழுகிறது. சினிமா போல, இல்லாத மின்வெட்டை ஏற்படுத்தி, அதை ஒரே மாதத்தில் நிவர்த்தி செய்தோம் என்ற பிம்பத்தை உருவாக்க முயல்வதாக தோன்றுகிறது. 5 ஆண்டுகளாக தி.மு.க. ஆட்சியிலும் வெயில் கடுமையாக இருந்தது. ஆனால், இதுபோன்ற மின்வெட்டு இல்லை. மேலும் ஸ்ரீவைகுண்டம் பெண்ணுக்கு ஏற்பட்ட பாதிப்பில் சம்மந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் நேரத்தில் குறைவான தொகுதிகள் கொடுக்கும்போது கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட்டணியில் இருந்து வெளியேறி இருக்க வேண்டியதுதானே? தி.மு.க. காங்கிரசுக்கு கொடுத்த 28 தொகுதிகளில் போட்டியிட்டு இருந்தால் 15 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கும். தவெகவுக்கு 108 தொகுதிகள் கிடைத்திருக்காது. தகைசால் தமிழர் விருது கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்குதான் கொடுக்கப்பட்டது. தி.மு.க. தலைவர்களுக்கு கொடுக்கப்படவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - பி.கே. சேகர்பாபு முன்னிலை! டி.எஸ்.பி.இராஜகோபால் தலைமை!

அம்பத்தூர் தெற்குப் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா! மாபெரும் புகழரங்கம்!

தங்கம் தென்னரசு – நா.எழிலன் – சே.மெ.மதிவதனி சிறப்புரை!

சென்னை, ஜூன் 13–

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, புத்தெழுச்சி 18 தகுதியால் தலைவரானவர்! தத்துவத்தில் உறுதியானவர்!! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நிகழ்ச்சி நாளை (14.06.2026) ஞாயிறுக்கிழமை மாலை 6.00 மணிக்கு பாடியாதவாள் தெரு செ 50 ல், அம்பத்தூர் தெற்குப் பகுதி செயலாளர் டி. எஸ். பி. இராஜகோபால் MC தலைமையில் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மேயர் பிரியா ராஜன், வடக்குப் பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல், மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி MC , பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ், எல். பி.எப்.மோகன், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர் ஜி. சாந்தகுமாரி, ஜெ. பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி, கு. கிருஷ்ணமூர்த்தி, து. ஆயிரம், பகுதி நிர்வாகிகள்: மு.நடராஜன், து.செல்வராஜ் ,ஆர். கதிரவன், கவிதாசெல்லதுரை, கு.சங்கர், வட்டக் கழகச் செயலாளர்கள்: சி. சீனிவாசன், M.E. சேகர் MC, நா.நெப்போலியன், இரா.டீக்கா, மாமன்ற உறுப்பினர்கள்: எஸ். உமா MC, உஷாநாகராஜ் MC, கே.பொற்கொடி MC, எம். கமல் MC ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். அம்பத்தூர் தெற்குப் பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: பொ. சேதுராமன் (எ) பொன் சேட்டு, ஏ.கே. டி. பாஸ்கர், பா. மாறன், டி.சுரேஷ் பாபு, ஆர். ஜெயராமன், சோ.மதியழகன், எஸ். கே. சதீஷ்குமார், எஸ். எஸ். சவரி முத்து, எஸ். எம்.முருகானந்தம், ஏ.வி. தட்சிணாமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

தங்கம் தென்னரசு (விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்). டாக்டர் நா. எழிலன் (கழக மருத்துவ அணிச் செயலாளர்), சே. மெ.மதிவதனி (துணைப் பொதுச் செயலாளர் திராவிடர் கழகம்), ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.

கழகத் துணை அமைப்புச் செயலாளர் ப. தாயகம் கவி, தேர்தல் பார்வையாளர் சன். முனியாண்டி ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகின்றனர். கழக மாநில நிர்வாகிகள்: ப. ரங்கநாதன், கே. எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், சங்கரி நாராயணன், எஸ். மணிமுடி, வே. உமாகாந்த், கே.எஸ். எம். நாதன், எம். விஜயகுமார், என். பி. எம்.ஷேக்அப்துல்லா, பரிதி இளம் சுருதி, ஆர்.வரதன், மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி. மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், மண்டலக் குழுத் தலைவர்கள்: கூ.பீ. ஜெயின், ஸ்ரீ ராமலு, சொ.வேலு, சரிதா மகேஷ் குமார், பகுதிச் செயலாளர்கள் வே. வாசு, ஜ.சி.எப். வ. முரளிதரன், எ. நாகராசன், வி. சுதாகர், எம். சாமிகண்ணு, செ. தமிழ் வேந்தன், எஸ். ராஜசேகர், எஸ். முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, எஸ். பன்னீர்செல்வம், டி. வி. செம்மொழி, பி.ஜெ. துளசிங்கம், பி. உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், எம். இப்ராஹிம்கனி, அ. நிர்மலாதேவி, இரா. கலைச்செல்வி

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் : 9வானவில் விஜய், பா. ஜெகதீஷ், க. வினோத், ஜி. ஜெ. பிரபு, எஸ். தனசேகர், ஆர்.டி. சங்கர்நானா, பா.ரஞ்சித் விஜயாலயன், நா. துலுக் காணம், ஜி. தாமோதரன், துரை கண்ணன், சுதாதீனதயாளன்MC, ராஜேஸ்வரிஸ்ரீதர்MC, பி. விஜயகுமார், எம். பெரோஸ்கான், எம். விநாயகம், ஆர். எஸ். சித்திக், க. பா. பிரதீப்குமார், ம. அசோக்குமார், எல். சம்பத்குமார், கா. ராஜ்முகமது. இரா. வீரமணி அம்பத்தூர் வடக்கு, கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.செல்வம், க.முரளிபாபு, க. கதீஜா, மா. ரமேஷ், து. ஜெகநாதன், பி. ஆர். இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, மேனாம் பேடு இ. ராமு,

அம்பத்தூர் வடக்கு, கிழக்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள்: வி. ரவீந்திரன், பு. வீரா, வெ. ராதா கிருஷ்ணன், மு. ரகு, த, கண்ணபிரான், மு. சண்முகம், ஆ. சுந்தர்ராஜ், சீ.லோகநாதன், சு.மோகன் குமார், மு. விஜயகுமார், த. வ. லால் , மாவட்ட பிரதிநிதிகள்: பொன். நவராஜ்ரவி, எம். குணசேகரன், ப. மதி, ஆ.இரா.அருண், கோ.சேகர்லால், க.ஜீவா, எஸ்.பி. அரிகிருஷ்ணன், மா. குப்புசாமி, எம். ஹரிகிருஷ்ணன், பி. வி. மூர்த்தி, கே.செல்வம், கோ.முத்துக்குமாரசாமி , கோ. ராஜ்குமார், ந. குமரவடிவேல், ச. கோதண்டன், கோ. இன்பசேகரன், இ. நடராஜன், ஆர். விமலன், ஜெ. ஜயப்பன், எஸ். பரமசிவம், கழக முன்னோடிகள் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துக்கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர் த.பிரகாஷ்குமார் நன்றி கூறுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்போரூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் கழக பேச்சாளர் சபாபதி மோகன், மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன், ஒன்றியச் செயலாளர்கள் வீ.தமிழ்மணி, பையனூர் எம்.சேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.செல்வகுமார், பேரூர் செயலாளர்கள் ஜி.டி.யுவராஜ், மு.தேவராஜ், செங்கல்பட்டு கஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தையூர் விஜயகுமார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ச.சசிகலா, ஆர்.கோவிந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.